# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றம்

---

# 1998 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க, வரி மற்றும் வெளிநாட்டுச் செலாவணி மன்னிப்புச் சட்டம்

---

*(1998, செத்தெம்பர் மாதம் 14 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது.*

*1998, செத்தெம்பர் மாதம் 18 ஆந் தேதிய* **இலங்கைச சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்** II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.

---

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

கொழும்பு 1, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

**விலை : ரூபா 12.60** **தபாற் செலவு : ரூபா 2.50**

## 1998 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க, வரி மற்றும் வெளிநாட்டுச் செலாவணி மன்னிப்புச் சட்டம்

[1998 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 14 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]

ச. வ. — ஓ. 6/98

**இலங்கையில் அல்லது இலங்கைக்கு வெளியே கொண்டிருக்கப்பட்டவையும் அவை தொடர்பில் ஆளொருவரால் விவரத்திரட்டொன்று சமர்ப்பிக்கப்படாதிருக்கின்றதும் அல்லது வருமான வரி விதிப்பனவு தொடர்பிலான சட்டத்தின் கீழ் அத்தகைய ஆளினால் சமர்ப்பிக்கப்பட்ட விவரத்திரட்டொன்றில் வெளிப்படுத்தப்பட்டிராதவையுமான திரட்டிய இலாபங்களையும் வருமானத்தையும் குறித்து நிற்கும் பணங்களை அல்லது எவரேனும் ஆளினால் இலங்கைக்கு வெளியே வைத்திருக்கப்பட்ட இயைபான வெளிநாட்டு நாணயத்தை, இலங்கை முதலீட்டுச் சபையால் அங்கீகரிக்கப்பட்ட குறித்த சில கம்பெனிகளில் முதலீடு செய்வதனை அல்லது ஏதேனும் வங்கியில் வைப்பிலிடுவதை இயலச்செய்வதற்கும்; அத்தகைய வைப்புக்கள்மீது வரி செலுத்துவதற்கு ஆட்களுக்குள்ள பொறுப்பைக் குறைப்பதற்கும்; வருங்காலத்தில் அத்தகைய ஆட்களை வரிச்சட்டங்களுக்கும் செலாவணிக் கட்டுப்பாடு தொடர்பிலான சட்டத்திற்கும் முழுமையாக இணங்கியொழுகச் செய்யும் நோக்கத்துடன் குறித்த சில வரிகளைச் செலுத்துவதற்கான பொறுப்பிற்கெதிராகவும் அத்துடன் அத்தகைய வரிச்சட்டங்கள் அல்லது செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டம் தொடர்பிலான தவறுகளுக்காகக் குற்றவழக்குத் தொடரப்படுவதற்கு அல்லது தண்டப்பணங்களுக்கெதிராகவும் ஆட்களுக்கு நட்டோத்திரவாதம் அளிப்பதற்கும்; அத்துடன் அவற்றோடு தொடர்புடைய அல்லது அவற்றிற்கு இடைநேர்விளைவான கருமங்களுக்கு ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டம்.**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

1. இச்சட்டம் 1998 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க, வரி மற்றும் வெளிநாட்டுச் செலாவணி மன்னிப்புச் சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம். சுருக்கப் பெயர்.

2— டீ 049702— 1685 (98/06)

இச்சட்டம் ஏற்புடைத் தாகும் ஆட்கள்.

**2.** (1) இச்சட்டம் (2) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய—

(அ) வருமான வரியின் அல்லது வருமான வரியின் மீதான மிகை வரியின் விதிப்பனவுக்கு அப்போதைக்கு ஏற்புடைத்தாகும் சட்டத்தின் கீழ், 1996, மாச்சு 31 ஆம் தேதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ எழுந்த அல்லது திரண்ட ஏதேனும் இலாபம் அல்லது வருமானம் தொடர்பில், 1996, மாச்சு 31 ஆம் தேதியன்று அல்லது அதற்கு முன்னர் முடிவுற்ற ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டிற்கான வருமான வரி செலுத்துவதற்கு ஆளானவராயிருந்தவரும் அத்துடன் ஏதேனும் அத்தகைய வரிமதிப்பீட்டாண்டிற்கு அத்தகைய சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் வருமானத்தின் விவரத்திரட்டொன்றைக் கொடுத்துதவாதவரும் அல்லது ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டிற்கு அத்தகைய சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் அவரால் கொடுத்துதவப்பட்ட ஏதேனும் விவரத்திரட்டில் அத்தகைய இலாபங்களை அல்லது வருமானத்தை வெளியிட்டிராதவருமான ; அல்லது

(ஆ) இலங்கைக்கு வெளியே ஏதேனும் இயைபான வெளிநாட்டு நாணயத்தை வைத்திருக்கின்றவருமான,

எவரேனும் ஆளுக்கு ஏற்புடையதாதல் வேண்டும்.

(2) இச்சட்டமானது, 1997 நவெம்பர் 6 ஆந் தேதியன்று எந்த ஆள் தொடர்பில் —

(அ) 1996, மாச்சு 31 ஆம் தேதியன்று அல்லது அதற்கு முன்னர் எவரேனும் ஆளுக்கு எழுந்த அல்லது திரண்ட அல்லது அவரால் பெறப்பட்ட, விடயத்திற்கேற்ப ஏதேனும் இலாபங்களும் வருமானமும் தொடர்பில் அல்லது மொத்த விற்பனை வரவு தொடர்பில் அப்போதைக்கு வருமானவரி விதிப்பனவுக்கு ஏற்புடைத்தாகும் சட்டத்தின் கீழ் அல்லது 1963 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, நிதிச்சட்டத்தின் கீழ் அல்லது 1981 ஆம் ஆண்டின் 69 ஆம் இலக்க, மொத்த விற்பனை வரவு வரிச் சட்டத்தின் கீழ் அல்லது 1991 ஆம் ஆண்டின் 52 ஆம் இலக்க, தேசிய பாதுகாப்பு அறவீட்டுச் சட்டத்தின் கீழ் செலுத்தப்படற்பாலதான ஏதேனும் வரியை, சார்த்தப்பட்டதான அல்லது சந்தேகிக்கப்பட்டதான ஏதேனும் தட்டிக்கழித்தலுக்காக ; அல்லது

(ஆ) செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் அல்லது 1979 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, பயங்கரவாதத் தடை (தற்காலிக ஏற்பாடுகள்) சட்டத்தின் ஏதேனும் ஏற்பாட்டின், சார்த்துப்பட்டதான அல்லது சந்தேகிக் கப்பட்டதான மீறுகைக்காக,

ஏதேனும் புலனாய்வு முடிவுறாதிருக்கின்றதோ அந்த எவரேனும் ஆளுக்கு ஏற்புடையதாதல் ஆகாது.

(3) இரண்டாம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட ஆளொருவராக அல்லாத, (1) ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட ஒவ்வோர் ஆளும், இச்சட்டத்தில் இதனகத்துப் பின்னர் "இச்சட்டம் ஏற்புடையதாகும் ஆளொருவர்" எனக் குறிப்பீடு செய்யப்படுவார்.

இச்சட்டம் எந்த ஆட்களுக்கு ஏற்புடைத்தாகின்றதோ அந்த ஆட்கள் அத்தகைய பணத்தை குறித்துரைக்கப்பட்ட ஒருசில பொறுப்பு முயற்சிகளில் முதலீடு செய்யலாம் அல்லது அத்தகைய பணத்தை வங்கியொன்றில் வைப்பீடு செய்யலாம்.

3. (1) இச்சட்டம் ஏற்புடையதாகின்றவரும் அத்துடன் –

(அ) ஏதேனும் இயைபான பணங்களைக் கொண்டுள்ளவரும், அல்லது

(ஆ) ஏதேனும் இயைபான வெளிநாட்டு நாணயத்தை வைத்திருக்கின்றவருமான,

ஆளெவரும் –

(i) அத்தகைய இயைபான பணங்களை அல்லது அத்தகைய இயைபான வெளிநாட்டு நாணயத்தை மாற்றுவதன் மூலம் பெறப்பட்ட பணங்களை, ஏதேனும் குறித்துரைக்கப்பட்ட பொறுப்புமுயற்சியில் மட்டும் ஈடுபட்டுள்ள ஏதேனும் கம்பெனியில், ஏதேனும் உளதாயிருக்கின்ற பங்காக இல்லாத வேறு ஏதேனும் பங்கின் கொள்வனவில், 1997, நவெம்பர் 5 ஆம் தேதியின் பின்னர், ஆனால் 1999, யூன் 30 ஆம் தேதியன்று அல்லது அதற்கு முன்னர் முதலீடு செய்யலாம் ;

(ii) அத்தகைய இயைபான பணங்களை அல்லது அத்தகைய இயைபான வெளிநாட்டு நாணயத்தை மாற்றுவதன் மூலம் பெறப்பட்ட பணங்களை, 1997, நவெம்பர் 5 ஆம் தேதியின் பின்னர் ஆனால் 1998, திசெம்பர் 31 ஆம் தேதியன்று அல்லது அதற்கு முன்னர், ஏதேனும் வங்கியில் வைப்பீடு செய்யலாம்

என்பதுடன், அவ்வாறு வைப்பீடு செய்யப்பட்ட பணங்களின் பதினைந்து சதவீதத்திற்குச் சமமான தொகையொன்றை (இச்சட்டத்தில் இதனகத்துப் பின்னர் இது "மன்னிப்புவரி" எனக் குறிப்பீடு செய்யப்படும்) ஆணையாளர் தலைமையதிபதிக்குச் செலுத்துதலும் வேண்டும்.

(2) இப்பிரிவின் நோக்கங்களுக்கு "குறித்துரைக்கப்பட்ட பொறுப்பு முயற்சி" என்பது –

(i) இலத்திரனியல் உற்பத்திப் பொருட்களை அல்லது அத்தகைய உற்பத்திப் பொருட்களுக்கான உறுப்பு களை உற்பத்தி செய்வதற்காக அல்லது பொருத்து வதற்காக ;

(ii) மட்பாண்ட உற்பத்திப் பொருட்களின் அல்லது கண்ணாடிப் பொருட்களின் உற்பத்திக்காக ;

(iii) இலங்கையில் உற்பத்தி செய்யப்பட்ட இறப்பரைப் பயன்படுத்தும் இறப்பர் உற்பத்திப் பொருட்களின் உற்பத்திக்காக ;

(iv) ஆபரணங்களின் உற்பத்திக்காக ;

(v) இரத்தினக் கற்களை அல்லது வைரக் கற்களை வெட்டுவதற்கும் பட்டை தீட்டுதற்குமாக ;

(vi) பாரமற்ற அல்லது கனரகப் பொறியியலுக்காக ;

(vii) வீடுகளின் நிர்மாணிப்பு மற்றும் விற்பனைக்காக ; அல்லது

(viii) ஏதேனும் ஒரு விடயத்தில் முன்னோடியாகும் இயல்பினதாக இருப்பதாக இலங்கை முதலீட்டுச் சபையால் குறித்தொதுக்கப்பட்ட கைத்தொழிலொன்றாக அல்லது சேவையொன்றாகவிருக்கும் எவையேனும் பொருட்களின் அல்லது பண்டங்களின் உற்பத்திக்காக அல்லது ஏதேனும் சேவையை வழங்குவதற்காக,

1978 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, இலங்கை முதலீட்டுச் சபைச் சட்டத்தின் 17 ஆம் பிரிவின் கீழ் இலங்கை முதலீட்டுச் சபையால் எந்தக் கம்பெனியுடன் உடன்படிக்கையொன்று செய்துகொள்ளப்பட்டதோ, அந்தக் கம்பெனியொன்றால் கொண்டுநடாத்தப்படும் ஏதேனும் பொறுப்பு முயற்சியென்று பொருள்படும்.

4. இச்சட்டம் ஏற்புடைத்தாகின்றவரும் அத்துடன் — குறித்த சில வரிகளிலிருந்து நட்டோத்திரவாதமளித்தல்.

(அ) பிரிவு 3 (1) (i) என்பதற்கிணங்க ஏதேனும் முதலீட்டைச் செய்திருக்கின்றவரும் ; அல்லது

(ஆ) பிரிவு 3 (1) (ii) என்பதற்கிணங்க ஏதேனும் வைப்பீட்டைச் செய்து, அத்துடன் அதன் மேல் மன்னிப்பு வரியைச் செலுத்தியுள்ளவரும்,

அத்துடன் 5 ஆம் பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட தோதான வெளிப்படுத்துகையொன்றைச் செய்துள்ளவருமான ஆளெவரும் —

(அ) (i) பிரிவு 3 (1) (i) என்பதன் ஏற்பாடுகளுக்கிணங்க முதலீடுசெய்யப்பட்ட பணங்களை அல்லது 3 (1) (ii) ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கிணங்க வைப்பீடு செய்யப்பட்ட பணங்களாகவும் அத்துடன் அது தொடர்பில் மன்னிப்புவரி செலுத்தப்பட்டுள்ளதுமாகிய பணங்களைக் குறித்து நிற்கின்றவாறான, 1996, மாச்சு 31 ஆம் தேதியன்று அல்லது அதற்குமுன்னர் முடிவடைகின்ற ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டிற்கான அவரது இலாபங்களினதும் வருமானத்தினதும் அத்தகைய

பாகம் தொடர்பில், விடயத்திற்கேற்ப, அப்போதைக்கு வருமான வரி விதிப்பனவுக்கு ஏற்புடைத்தான சட்டத்தின் கீழ் அல்லது வருமான வரி மீதான மிகை வரி விதிப்பனவுக்கு ஏற்புடைத்தான சட்டத்தின் கீழ் முறையே செலுத்தப்படற்பாலதான ஏதேனும் வருமான வரியை அல்லது வருமான வரி மீதான மிகை வரியை ;

(ii) அப்போதைக்கு செல்வ வரி விதிப்பனவுக்கு ஏற்புடைத்தாகும் சட்டத்தின் கீழும் அப்போதைக்கு செல்வ வரி மீதான மிகை வரி விதிப்பனவுக்கு ஏற்புடைத்தாகும் சட்டத்தின் கீழும் 1992, மாச்சு 31 ஆம் தேதியன்று அல்லது அதற்கு முன்னர் முடிவடையும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டிற்கு (1) ஆம் உட்பந்தியில் குறிப்பீடு செய்யப்படுகின்றவாறான அவரது இலாபங்களினதும் வருமானத்தினதும் அத்தகைய ஏதேனும் பாகத்தைப் பயன்படுத்தி, கொள்ளப்பட்டவாறான அவரது தேறிய செல்வத்தின் அத்தகைய பாகம் தொடர்பில் முறையே செலுத்தப்படற்பாலதான ஏதேனும் செல்வ வரியை அல்லது செல்வ வரி மீதான மிகை வரியை ;

(iii) எந்த மொத்த விற்பனை வரவிலிருந்து (1) ஆம் உட்பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்டவாறான இலாபங்களினதும் வருமானத்தினதும் அத்தகைய பாகம் எழுந்ததோ அல்லது பெறப்பட்டதோ அத்தகைய மொத்த விற்பனை வரவு தொடர்பில் 1963 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, நிதிச்சட்டத்தின் கீழ் வியாபார மொத்த விற்பனை வரவு வரியை அல்லது 1981 ஆம் ஆண்டின் 69 ஆம் இலக்க, மொத்த விற்பனை வரவு வரிச் சட்டத்தின் கீழ் மொத்த விற்பனை வரவு வரியை அல்லது 1991 ஆம் ஆண்டின் 52 ஆம் இலக்க, தேசிய பாதுகாப்பு அறவீட்டுச் சட்டத்தின் கீழ் ஏதேனும் தேசிய பாதுகாப்பு அறவீட்டை,

செலுத்துவதற்கு ; அல்லது

(ஆ) (i) 1996, மாச்சு 31 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் முடிவடையும் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டு தொடர்பில், (அ) என்னும் பந்தியின் (i) ஆம் உட்பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்டவாறான அவரது இலாபங்களினதும் வருமானத்தினதும் அத்தகைய பாகம் சம்பந்தமாக அல்லது தொடர்பில் அல்லது (அ) என்னும் பந்தியின் (ii) ஆம் உட்பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்டவாறான அவரது தேறிய செல்வத்தினதும் அத்தகைய பாகம் சம்பந்தமாக அல்லது தொடர்பில், அப்போதைக்கு ஏற்புடைத்தான வருமான வரி அல்லது வருமான வரி மீதான மிகை வரி அல்லது செல்வ வரி அல்லது செல்வ வரி மீதான மிகை வரி விதிப்பனவிற்கு ஏற்புடைத்தான சட்டத்தின் கீழ் ;

(ii) பந்தி (அ) என்பதன் (iii) ஆம் உட்பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்டவாறான அத்தகைய மொத்த விற்பனை வரவு சம்பந்தமாக அல்லது அது தொடர்பில் 1963 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க நிதிச்சட்டத்தின் கீழ், அல்லது 1981 ஆம் ஆண்டின் 69 ஆம் இலக்க மொத்த விற்பனை வரவு வரிச் சட்டத்தின் கீழ் அல்லது 1991 ஆம் ஆண்டின் 52 ஆம் இலக்க தேசிய பாதுகாப்பு அறவீட்டுச் சட்டத்தின் கீழ் ;

(iii) இயைபான ஏதேனும் வெளிநாட்டு நாணயத்தை மாற்றுவதன் மூலம் பெறப்பட்ட பணங்களைக் கொண்டுள்ளவாறான அவ்வாறு முதலீடு செய்யப்பட்ட அல்லது அவ்வாறு வைப்பீடு செய்யப்பட்ட பணங்களின் அத்தகைய பாகம் தொடர்பில் செலாவணி கட்டுப்பாட்டுச் சட்டத்தின் கீழ்,

ஏதேனும் தவறுக்காகக் குற்றவழக்கொன்றுக்கு அல்லது தண்டப்பணமொன்றுக்கு ஆளாதல் ஆகாது.

ஆணையாளர் தலைமையதிபதிக்குச் செய்யப்பட வேண்டிய வெளிப்படுத்துகை.

5. (1) பிரிவு 3 (1) (i) என்பதற்கிணங்க பணங்களை முதலீடு செய்கின்றவரும் அல்லது 3 (1) (ii) ஆம் பிரிவிற்கிணங்க பணங்களை வைப்பீடு செய்கின்றவரும் அத்துடன் அதன் மீது மன்னிப்பு வரியைச் செலுத்துகின்றவருமான ஒவ்வோராளும், இச்சட்டத்திற்கான அட்டவணையில் தரப்பட்டுள்ள தோதான படிவத்தில் ஆணையாளர் தலைமையதிபதிக்கு வெளிப்படுத்துகையொன்றைச் செய்யலாம்.

(2) உட்பிரிவு (1) இன்கீழ்ச் செய்யப்பட்ட ஏதேனும் வெளிப்படுத்துகையானது அத்தகைய முதலீடானது அல்லது வைப்பீடானது முற்றிலும் அல்லது பகுதியளவில், ஏதேனும் இயைபான வெளிநாட்டு நாணயத்தை மாற்றுவதன்மூலம் பெறப்பட்ட பணங்களாலானதென வெளிப்படுத்துமிடத்து, ஆணையாளர் தலைமையதிபதி அத்தகைய வெளிப்படுத்துகையின் பிரதியொன்றைச் செலாவணிக் கட்டுப்பாட்டதிகாரிக்கு அனுப்புவித்தல் வேண்டும்.

இச்சட்டத்தின் முற்போந்த ஏற்பாடுகள், முன்னர் செய்யப்பட்ட ஏதேனும் மதிப்பீட்டை மீளாய்வு செய்வதற்கு அதிகாரமளிப்பதாகப் பொருள்கொள்ளப்படாமை.

6. இச்சட்டத்தின் முற்போந்த ஏற்பாடுகளிலுள்ள எதுவும், ஏதேனும் சட்டத்தின் ஏதேனும் ஏற்பாட்டின் கீழ் இறுதியானதும் முடிவானதாயுமுள்ள —

(அ) (i) வருமான வரி அல்லது வருமான வரி மீதான மிகை வரி அல்லது செல்வ வரி அல்லது செல்வ வரி மீதான மிகை வரி விதிப்பனவு தொடர்பிலான அப்போதைக்கான சட்டத்தின் ; அல்லது

(ii) 1963 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க நிதிச்சட்டத்தின் 1981 ஆம் ஆண்டின் 69 ஆம் இலக்க மொத்த விற்பனை வரவு வரிச் சட்டத்தின் அல்லது 1991 ஆம் ஆண்டின் 52 ஆம் இலக்கத் தேசிய பாதுகாப்பு அறவீட்டுச் சட்டத்தின்,

ஏற்பாடுகளின் கீழ் செய்யப்பட்ட ஏதேனும் வரிமதிப்பீட்டை ;

(ஆ) 1996 மாச்சு 31 ஆம் தேதிக்கு முன், இச்சட்டம் ஏற்புடைத்தாகும் எவரேனும் ஆள் மீதும் அத்துடன் அவரால் செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் ஏதேனும் ஏற்பாட்டினது ஏதேனும் மீறுகை தொடர்பிலும் சுமத்தப்பட்ட ஏதேனும் தேவைப்பாட்டை ; அல்லது

(இ) வேறு ஏதேனும் கருமத்தை,

மீளாய்வு செய்வதற்கு அதிகாரமளிப்பதாக வாசித்துப் பொருள் கொள்ளப்படுதலாகாது.

## 1998 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க, வரி மற்றும் 9 வெளிநாட்டுச் செலாவணி மன்னிப்புச் சட்டம்

இச்சட்டம் ஏற்புடைத்தாகும் ஆட்கள் குறித்த சில கழிப்பனவுகளுக்கு உரித்துடையவர்களாக மாட்டார்கள் என்பது.

7. வேறு ஏதேனும் சட்டத்தில் உள்ளது, எது எவ்வாறிருப்பினும், 1979 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் 30 ஆம் பிரிவின் நோக்கங்களுக்கு, (3) (1) (i) ஆம் பிரிவிற்கிணங்க அவரால் செய்யப்பட்ட ஏதேனும் முதலீடு தொடர்பில் இச்சட்டம் ஏற்புடைத்தாகும் எவரேனும் ஆளுக்கு, கழிப்பனவு எதுவும் அனுமதிக்கப்படுதல் ஆகாது.

இரகசியம் பேணல்.

8. (1) இச்சட்டத்தின்கீழ், தமது கடமைகளைப் புரிகையில் தவிரவும், அத்துடன் (2) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கு அமையவும் உண்ணாட்டரசிறைத் திணைக்களத்தின் செலாவணிக் கட்டுப்பாட்டுத் திணைக்களத்தின் அல்லது ஒவ்வொரு வங்கியினதும் அலுவலர் அல்லது ஊழியர் ஒவ்வொருவரும், இச்சட்டத்தை நிருவகிக்கையில் அவரது அறிவுக்கு எட்டக்கூடிய எல்லா விடயங்கள் தொடர்பிலும் இரகசியத்தைப் பேணுதலும், பேணுதலில் உதவுதலும் வேண்டும் என்பதுடன், 3 ஆம் பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்டவாறான ஏதேனும் அத்தகைய முதலீடு அல்லது வைப்பீடு தொடர்பில் எத்தன்மையதுமான ஏதேனும் தகவலை எவரேனும் தனியாளுக்கு, ஏதேனும் கூட்டுத்தாபனத்திற்கு, வங்கிக்கு, நீதிமன்றத்திற்கு, நிறுவனத்திற்கு, தாபனத்திற்கு, திணைக்களத்திற்கு, இலங்கை அரசாங்கத்தின் எவரேனும் அலுவலருக்கு, முகவருக்கு, பிரதிநிதிக்கு அல்லது வேறு எவரேனும் சட்ட ஆளுக்கு அல்லது இயற்கை ஆளுக்குக் கொடுத்தலோ, வெளிப்படுத்துதலோ அல்லது வெளிவிடுதலோ ஆகாது.

(2) ஓராம் உட்பிரிவின் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும், விடயத்திற்கேற்ப ஆணையாளர் தலைமையதிபதி அல்லது செலாவணிக் கட்டுப்பாட்டதிகாரி அல்லது வர்த்தக வங்கியின் ஓர் அலுவலர் அல்லது ஊழியர் –

(i) அத்தகைய கருமம் அல்லது தகவல் எந்த ஆள் தொடர்பிலானதோ, அந்த ஆளினால் ;

(ii) போதைப்பொருள் அல்லது விமானக்கடத்தல் மீதான சர்வதேச சமவாயமொன்றுக்குப் பயனளிக்கும் ஏதேனும் சட்டத்தின் கீழ் ஏதேனும் நீதிமன்றத்தில் தொடரப்பட்ட எவையேனும் குற்றவியல் வழக்கு நடவடிக்கைகளில், அச்சட்டத்தின் ஏதேனும் ஏற்பாட்டினால் ;

(iii) அப்போதைக்கு வருமான வரி விதிப்பனவுக்கு ஏற்புடைத்தான சட்டத்தின் கீழ், அவ்வுடன்படிக் கைக்கிணங்க, வருமானத்தின் மீது இரட்டை வரி விதிப்பனவைத் தவிர்ப்பதற்காக எந்த நாட்டுடன் இலங்கை ஏதேனும் உடன்படிக்கையைச் செய்துள்ளதோ, அந்த ஏதேனும் நாட்டின் தகுதிவாய்ந்த அதிகாரியால்; அல்லது

(iv) மூன்றாம் பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட ஏதேனும் முதலீட்டை அல்லது வைப்பீட்டைக் குறிக்கும் பணங்கள் 1979 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, பயங்கரவாதத் தடுப்பு (தற்காலிக ஏற்பாடுகள்) சட்டத்தின்கீழான தவறொன்றாக அமையும் செயலொன்றை முன்னெடுத்துச் செல்வதற்குப் பயன்படுத்தப்பட்டுள்ளன அல்லது பயன்படுத்தப் படுகின்றன என்ற ஏதுவின் மீது அதற்கான விண்ணப்பமொன்றின் மீது செய்யப்பட்ட உயர் நீதிமன்றக் கட்டளையொன்றினால்,

அவ்வாறு செய்யுமாறு அவர் தேவைப்படுத்தப்படின், இச்சட்டத்தை நிருவகிக்கையில் அவரது அறிவுக்கு எட்டியுள்ள ஏதேனும் கருமத்தை அல்லது தகவலை அத்தகைய தெரிவிப்பு, அத்தகைய தேவைப்பாட்டிற்கு அல்லது நீதிமன்றக் கட்டளைக்கு இணங்கியொழுகும் நோக்கங்களுக்குக் கண்டிப்பாக அவசியப்படக்கூடிய வாறான அத்தகைய அளவுக்கு, அத்தகைய ஆளுக்கு அல்லது நீதிமன்றத்திற்குத் தெரிவித்தல் வேண்டும்.

(3) ஓராம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கு முரணாகச் செயற்படுகின்ற உண்ணாட்டரசிறைத் திணைக்களத்தின், செலாவணிக் கட்டுப்பாட்டுத் திணைக்களத்தின் அல்லது வங்கியின் எவரேனும் அலுவலர் அல்லது ஊழியர் இச்சட்டத்தின் கீழ்த் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன், நீதிவான் ஒருவர் முன்னிலையில் சுருக்கமுறை விளக்கத்தின் பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன் மீது ஒரு இலட்சம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு அல்லது ஓராண்டுக்கு மேற்படாதவொரு காலப்பகுதிக்கான மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டிற்கும் ஆளாதலும் வேண்டும்.

ஒவ்வாமையின் விடயத்தில் சிங்கள உரை மேலோங்குதல்.

9. இச்சட்டத்தின் சிங்கள உரைக்கும் தமிழ் உரைக்கும் இடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

**10**. இச்சட்டத்தில் சந்தர்ப்பம் வேறுவகையாகத் தேவைப் படுத்தினாலன்றி – பொருள்கோடல்.

"வங்கி" என்பது 1988 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க, வங்கித்தொழிற் சட்டத்தின் கீழ் உரிமமளிக்கப்பட்ட அல்லது உரிமமளிக்கப்பட்டதாகக் கருதப்பட்ட ஏதேனும் வங்கி, அல்லது 1971 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க, தேசிய சேமிப்பு வங்கிச் சட்டத்தால் தாபிக்கப்பட்ட தேசிய சேமிப்பு வங்கி என்று பொருள்படும் ;

"ஆணையாளர் தலைமையதிபதி", "தேறிய செல்வம்", "இலாபங்களும் வருமானமும்", "வரிமதிப்பீட் டாண்டு" என்பன 1979 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டத்தில் முறையே அவற்றிற்குக் குறித்தொதுக்கப்பட்டவாறான பொருள்களைக் கொண்டிருத்தல் வேண்டும் ;

"இலங்கை முதலீட்டுச் சபை" என்பது, 1978 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, இலங்கை முதலீட்டுச் சபைச் சட்டத்தால் தாபிக்கப்பட்ட இலங்கை முதலீட்டுச் சபை என்று பொருள்படும் ;

"செலாவணிக் கட்டுப்பாட்டதிகாரி" என்பது, மத்திய வங்கியின் செலாவணிக் கட்டுப்பாட்டுத் திணைக் களத்தின் தலைவராகப் பெயர்குறித்து நியமிக் கப்பட்ட அலுவலர் என்று பொருள்படும் என் பதுடன், அவருக்கு உதவியாளராக பெயர்குறித்து நியமிக்கப்பட்ட அலுவலரொருவரையும் உள் ளடக்கும் ;

"செலாவணிக் கட்டுபாட்டுச் சட்டம்" என்பது (423 ஆம் அத்தியாயமான) செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டம் என்று பொருள்படும் ;

"வெளிநாட்டு நாணயம்" என்பது இலங்கை நாணயத்தைத் தவிர்ந்த வேறு ஏதேனும் நாணயம் என்று பொருள்படும் என்பதுடன் இலங்கையிலுள்ள அல்லது இலங்கையில் வதிவுள்ள ஆளொருவருக்கு அவரது ஓய்வூதியம் தொடர்பில் அல்லது அவருக்கு வருமதியான வேறு பணிக்கொடைகள் தொடர்பில் ஒரு வெளிநாட்டு அரசாங்கத்தால் அல்லது நிறுவனத்தால் செலுத்தப்படற்பாலதான ஏதேனும் நாணயத்தையும் அத்துடன் இலங்கை நாணயத்தைத் தவிர்ந்த வேறு ஏதேனும் நாணயத்தில் செலுத்தப்படற்பாலதான எல்லா வைப்பீடுகளையும் வரவுகளையும் மீதிகளையும் அத்துடன் இலங்கை நாணயத்தில் வெளிப்படுத்தப்பட்டவை அல்லது வரையப்பட்ட ஆனால், இலங்கை நாணயம் தவிர்ந்த ஏனைய நாணயத்தில் செலுத்தப்படற்பாலதான அத்தகைய எவையேனும் உண்டியல்களையும், பிரயாணிகள் காசோலைகளையும், நாணயக் கடிதங்களையும் அத்துடன் நாணய மாற்று உண்டியல்களையும் உள்ளடக்கும் ;

"இரத்தினக் கல்" என்பது 1993 ஆம் ஆண்டின் 50 ஆம் இலக்க, தேசிய இரத்தினக் கல், ஆபரண அதிகாரசபைச் சட்டத்தின் கருத்தெல்லைக்குட்பட்ட ஓர் இரத்தினக் கல் என்று பொருள்படும் ;

"ஆபரணம்" என்பது 1993 ஆம் ஆண்டின் 50 ஆம் இலக்க, தேசிய இரத்தினக் கல், ஆபரண அதிகாரசபைச் சட்டத்தின் கருத்தெல்லைக்குட்பட்ட ஆபரணம் என்று பொருள்படும் ;

"ஆள்" என்பது ஒரு கம்பெனியை, ஆட்கள் குழுவொன்றை அல்லது பங்காண்மையொன்றை உள்ளடக்கும் ;

"இயைபான வெளிநாட்டுச் செலாவணி" என்பது, ஆளொருவர் தொடர்பில், 1996, மாச்சு 31 ஆம் தேதியன்று அத்தகைய ஆளினால், இலங்கைக்கு வெளியே செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் ஏற்பாடுகளை மீறி, கொடை, நன்கொடை, மரபுரிமை என்ற வகையில் அல்லது வேறு வகையில் அவரால் இலங்கைக்கு வெளியே

கொள்ளப்பட்ட இலாபங்களும் வருமானமுமாக உள்ள அல்லது இலாபங்களுக்கும் வருமானத்திற்கும் ஏற்றிக் கூறப்படற்பாலதான அல்லது இலாபங்களும் வருமானமுமாக அல்லாத அல்லது இலாபங்களுக்கும் வருமானங்களுக்கும் ஏற்றிக்கூறப்படற்பாலதல்லாத வெளிநாட்டுச் செலாவணி என்று பொருள்படும் ;

"இயைபான பணம்" என்பது, ஆளொருவர் தொடர்பில், அத்தகைய ஆளினால் 1996, மாச்சு 31 ஆம் தேதியன்று இலங்கையில் அல்லது இலங்கைக்கு வெளியே வைத்திருக்கப்படுவதும், 1996, மாச்சு 31 ஆம் தேதியன்று அல்லது அதற்கு முன்னர் முடிவடைகின்ற ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டில் அத்தகைய ஆளுக்குச் சேர்ந்த அல்லது திரண்ட அல்லது அவரால் பெறப்பட்ட திரண்ட இலாபங்களை அல்லது வருமானத்தைக் குறிக்கின்றதும் அத்துடன் எந்த இலாபங்களும் வருமானமும் தொடர்பில் அப்போதைக்கு வருமான வரி விதிப்பனவுக்கு ஏற்புடைத்தாகும் சட்டத்தின் கீழ் அத்தகைய ஆள் வருமானத்தின் விவரத்திரட்டொன்றைக் கொடுத்துதவாதிருக்கின்றாரோ அந்த இலாபங்களையும் வருமானத்தையும் குறித்து நிற்கும் அல்லது அத்தகைய ஆளினால் கொடுத்துதவப்பட்ட வருமான விவரத்திரட்டொன்றில் வெளிப்படுத்தப்படாத இலாபங்களையும் வருமானத்தையும் குறித்து நிற்கும் எவையேனும் (இயைபான வெளிநாட்டு நாணயம் அல்லாத) பணங்கள் என்று பொருள்படும் ;

"அப்போதைக்கு வருமான வரி விதிப்பனவுக்கு ஏற்புடைத்தாகும் சட்டம்" என்பது 1979 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டம் என்று பொருள்படும் ;

"அப்போதைக்கு வருமான வரி மீதான மிகை வரி விதிப்பனவுக்கு ஏற்புடைத்தாகும் சட்டம்" என்பது 1982 ஆம் ஆண்டின் 26 ஆம் இலக்க, வருமான வரி மீதான மிகை வரிச் சட்டம், 1984 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, வருமானவரி மீதான மிகை வரிச் சட்டம் அத்துடன் 1989 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, வருமான வரி மீதான மிகை வரிச் சட்டம் என்று பொருள்படும் ;

"அப்போதைக்கு செல்வவரி அல்லது செல்வவரி மீதான மிகைவரி விதிப்பனவுக்கு ஏற்புடைத்தாகும் சட்டம்" என்பது 1979 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டம், 1982 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க, செல்வ வரி மீதான மிகை வரிச்சட்டம், அத்துடன் 1989 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்க செல்வ வரி மீதான மிகை வரிச் சட்டம் என்று பொருள்படும் ;

"மொத்த விற்பனை வரவு" அத்துடன் "காலாண்டு" என்பன 1981 ஆம் ஆண்டின் 69 ஆம் இலக்க, மொத்த விற்பனை வரவு வரிச் சட்டத்தால் முறையே அவற்றிற்குக் குறித்தொதுக்கப்பட்ட பொருள்களைக் கொண்டிருத்தல் வேண்டும்.

**அட்டவணை** (பிரிவு 5)

பாகம் I – பணத்தை பங்குகளில் முதலீடு செய்யும் ஆட்களினால் கொடுத்துதவப் பட வேண்டியது.

1998 ஆம் ஆண்டின் ........................ஆம் இலக்க வரி மற்றும் வெளிநாட்டுச் செலாவணி மன்னிப்புச் சட்டம்.

**5 ஆம் பிரிவின் கீழான வெளிப்படுத்துகை**

வருமான வரிக் கோப்பு இல. (ஏதேனும் இருப்பின்) :...........................

மொத்த விற்பனை வரவு வரிக் கோப்பு இல. (ஏதேனுமிருப்பின்) :–...............

தேசிய அடையாள அட்டை இலக்கம் (தனியாளாயின்) :..........................

கம்பெனி/பங்காண்மைப் பதிவு இலக்கம்:...................................

..........................................................என்னும் இடத்தைச் சேர்ந்த

(முகவரி)

திரு./திருமதி/செல்வி :.........................................................

(முழுப் பெயர்/ பெயர்கள்)

ஆகிய நான் /நாங்கள் :..........................................................

(கம்பனியின் அல்லது பங்காண்மையின் பெயர்)

...............................................................................என்ற

(பதவிப் பெயர்)

வகையில் –

## 1998 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க, வரி மற்றும் 15 வெளிநாட்டுச் செலாவணி மன்னிப்புச் சட்டம்

(1) 1998 ஆம் ஆண்டின் ........................ஆம் இலக்க, வரிமற்றும் வெளிநாட்டுச் செலாவணி மன்னிப்புச் சட்டத்தின் நியதிகளின்படி முற்றிலும் –

(i) என்னால்/கம்பெனியால்/பங்காண்மையால் இலங்கையில் வைத்திருக் கப்படும் வேறு பணமாகிய ரூபா..............(ரூபா...............)

(ii) இயைபான வெளிநாட்டு நாணயத்தின் மாற்றத்தின் மூலம் பெறப்பட்ட ரூபா.............. (ரூபா ...............)

அடங்கிய ரூபா........................................(ரூபா .................)
பணத்தொகையொன்றை இலங்கை முதலீட்டுச் சபையால் குறித்துரைக்கப்பட்ட பொறுப்பு முயற்சியொன்றென இனங்காணப்பட்டதும் அத்துடன் இலங்கை முதலீட்டுச் சபையுடன் 1978 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, இலங்கை முதலீட்டுச் சபைச் சட்டத்தின் கீழ் ..................................ஆந் தேதியில் ..................................ஆம் இலக்க உடன்படிக்கையைச் செய்துகொண்டுள்ளதுமான கம்பெனியொன்றாகிய ........................இல் ..................................பங்குகளை (ஏற்கனவே உளதாகவிராத பங்குகள்) ........................ஆந் தேதியில் முதலிட்டுள்ளேன்/முதலிட்டுள்ளோம் என வெளிப்படுத்துகின்றேன்/வெளிப்படுத்துகின்றோம்.

.......................................................

வெளிப்படுத்துபவர்/ வெளிப்படுத்துபவர்களின் ஒப்பம்/ ஒப்பங்கள்.

வெளிப்படுத்துகை தனியாரொருவரல்லாத வேறு வகையிலாயின் பதவிப் பெயர்.

தேதி :.....................

பாகம் II – பணத்தை வங்கிகளில் வைப்பீடு செய்யும் ஆட்களால் கொடுத்துதவப் பட வேண்டியது.

1998 ஆம் ஆண்டின் ........................ஆம் இலக்க, வரி மற்றும் வெளி நாட்டுச் செலாவணி மன்னிப்புச் சட்டம்.

### 5 ஆம் பிரிவின் கீழான வெளிப்படுத்துகை

வருமான வரிக் கோப்பு இல. (ஏதேனும் இருப்பின்) :..............................
மொத்த விற்பனை வரவு வரிக் கோப்பு இல. (ஏதேனுமிருப்பின்) : ...............
தேசிய அடையாள அட்டை இலக்கம் (தனியாளாயின்) :..........................
கம்பெனி/பங்காண்மைப் பதிவு இலக்கம் :..........................................
.................................................. என்னும் இடத்தைச் சேர்ந்த
(முகவரி)
திரு./திருமதி/செல்வி :..................................................................
(முழுப் பெயர்/ பெயர்கள்)
ஆகிய நான் /நாங்கள் :..................................................................
(கம்பெனியின் அல்லது பங்காண்மையின் பெயர்)
.................................................................என்ற வகையில்
(பதவிப் பெயர்)

(1) 1998 ஆம் ஆண்டின் ........................ஆம் இலக்க, வரிமற்றும் வெளிநாட்டுச் செலாவணி மன்னிப்புச் சட்டத்தின் நியதிகளின்படி முற்றிலும் –

(i) என்னால்/கம்பெனியால்/பங்காண்மையால் இலங்கையில் வைத்திருக்கப்படும் வேறு பணமாகிய ரூபா..................(ரூபா ...............)

(ii) இவையான வெளிநாட்டு நாணயத்தின் மாற்றத்தின் மூலம் பெறப்பட்ட ரூபா...............(ரூபா.........)

அடங்கிய ரூபா............(ரூபா.........) பணத்தொகையொன்றை............ தொடக்கம் ........................வரையில் ........................ஆம் இலக்கம் கொண்ட எனது/எமது கம்பெனியின் கணக்கில் வைப்பீடு செய்துள்ளேன்/செய்துள்ளோம் எனவும் அத்துடன் அச்சட்டத்தின் 3 ஆம் பிரிவின் நியதிகளின்படி அதன் மீதான வரியைச் செலுத்தியுள்ளேன்/செலுத்தியுள்ளோம் என வெளிப்படுத்துகின்றேன்/வெளிப்படுத்துகின்றோம்.

.................................................................
வைப்பிலிடுபவரின்/வைப்பிலிடுபவர்களின்
ஒப்பம்/ஒப்பங்கள்.

வெளிப்படுத்துகை தனியாரொருவரல்லாத வேறுவகையிலாயின் பதவிப் பெயர்.

தேதி :..................

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387: (வெளிநாடு) ரூபா 1,849 ; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்குமுன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், இல.32, திரான்ஸ்வேர்க்ஸ் இல்லம், லோட்டஸ்ரோட், கொழும்பு 01 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.